International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20-3 July - September 2026

Published on 14, Jul - Sep 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# (ஆக) சொல் புதிது பொருள் புதிது

**கோ. பழனிராஜன்**
உதவிப்பேராசிரியர், மொழியியல் துறை
கேரள மத்தியப் பல்கலைக்கழகம், காசர்கோடு

## முன்னுரை

ஒரு மொழி பேசுவோர் வேற்றுமொழி பேசுவோர்களுடன் தொடர்புகொள்ளும் பொது வேற்றுமொழி சொற்கள் மொழியில் கலப்பது இயல்பு. அந்தவகையில் தமிழ் மொழி ஆங்கில மொழியின் பல்வேறு கூறுகளைக் கடன் வாங்கியுள்ளது. ஆங்கில மொழியும் வெவ்வேறு மொழிகளில் இருந்தும் பல்வேறு கூறுகளையும், சொற்களையும் உள்வாங்கிக் கொண்டது. ஆங்கில மொழி 146 மொழிகளில் இருந்து சொற்களை தம்மொழிக்குள் உள்வாங்கிக் கொண்டுள்ளது. தமிழில் இருந்தும் பலசொற்களை ஆங்கிலம் தம்மொழிக்குள் உள்வாங்கிக்கொண்டுள்ளது. தாய்மொழிக்கு அடுத்ததாக, ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகக் கற்று 700 முதல் 800 மில்லியன் பேர் பேசுகிறார்கள். ஆங்கில மொழி ஏறத்தாழ 1500 ஆண்டுகளுக்கு முன்னர் இங்கிலாந்தில் வாழ்ந்த ஆங்கிலோ-சாக்சன் என்ற சிறு மக்கள் குழுவின் வட்டார மொழியாக இருந்து இன்று ஓர் உலக மொழியாக மிக குறுகிய காலத்தில் வளர்ந்துள்ளது. இதற்கு முதன்மையான காரணம் மொழி ஆளுமைதான். எந்த ஒரு மொழி பெரும்பான்மை மக்கள் பயன்படுத்தும் மொழியாகத் திகழ்கிறதோ அந்த மொழி சொல்வளமும் பொருள் வளமும் பெற்றுத் திகழும். அதுபோல் உலகம் முழுவதும் வாழும் தமிழர் தம் மொழியைச் சிறப்பாகப் பயன்படுத்தி வருகின்றனர். அந்த வகையில் ஆங்கில மொழியின் ஒரு பயன்பாட்டை தமிழில் அழகாகக் கொடுத்துள்ளனர். அது ஆக என்ற சொல்லின் ஆளுமையாகும். ஆக என்ற சொல்லின் ஆளுமை ஒரு புதிய பொருண்மையும் பயன்பாட்டையும் கொடுக்கின்றன.

ஆக என்ற சொல்லும் சிறந்த என்ற சொல்லும் சேர்ந்து ஒரு புதிய சொல்லை உருவாக்கியுள்ளது. இச்சொல் ஆங்கிலத் தொடரின் - Greatest Of All Time (G.O.A.T) - Mostly used in Sports Context. நேரடி பொருளாகும். ஆகச்சிறந்த என்ற சொல் தமிழ் அகராதியில் இடம்பெறாத புதிய சொல்லாகும்.

## அகராதிகளுள் ஆக

ஆக என்ற சொல் தமிழ் தமிழ்ப் பேரகராதியில் குறிப்பிட்ட இலக்கணக் கூறுகளையும் பொருண்மையும் குறிக்கின்றன. அவை 1. **வினையடை, 2. (விகற்பப்பொருள் தரும்) இடைச்சொல்ர 3. நான்காம் வேற்றுமை யுருபுடன் வருந் துணைச்சொல், 4. முற்றொடு சேர்ந்து செயவெ னெச்சப்பொருள் தரும் இடைச்சொல் என்ற நான்கு இலக்கணப் பொருண்மையில் வருகின்றன.**

**அ. தமிழ்ப் பேரகராதி (Tamil Lexicon)**

ஆக āka (p. 203),

1. **வினையடை** 1 On the whole amounting to **மொத்தமாய்** ஆகத்தொகை 2 Completely **முழுதும்** ஆகமோசம் 3 In that fashion **அவ்வாறாக** ஆக ராகவனை யவ்வழி கண்டான் (கம்பரா) conj Either or
2. **(விகற்பப்பொருள் தரும்) இடைச்சொல்** தெய்வத்தானாக மக்களானாகத் தனக்கு வந்த துன்பங்களை (குறள் 442) உரை - part 1 For the sake of, for the purpose of with கு of the dat
3. **நான்காம் வேற்றுமை யுருபுடன் வருந் துணைச்சொல்** அவனுக்காகக் கொடுத்தேன் - Part 2 joined to a finite verb to indicate indirect speech செய்திருறிக்கும் இடைச் சொல் அவன் கண்டதாகச் சொன்னான் 3 Part which gives participial force to the finite verb that precedes it
4. **முற்றொடு சேர்ந்து செயவெனெச்சப்பொருள் தரும் இடைச்சொல்** காரெதிர் குன் றம் பாடினே மாக (தொல் சொல் 282). தமிழ்ப் பேரகராதியில் (Tamil Lexicon) மேற்கண்ட நான்கு பொருண்மையில் இடம்பெற்றுள்ளது.

**க்ரியா தற்காலத் தமிழ் அகராதி**

ஆக என்ற சொல் க்ரியா தற்காலத் தமிழ் அகராதியில் குறிப்பிட்ட இலக்கணக் கூறுகளையும் பொருண்மையும் குறிக்கின்றன. அவை கீழ்க்கண்ட எட்டுப் பொருண்மையில் இடம்பெற்றுள்ளன.

1. பெயர்ச்சொல்லை வினையடை ஆக்கும் இடைச்சொல்
2. தொடரை வினையடை ஆக்கப் பயன்படும் இடைச்சொல்
3. வாக்கியத்தில் எழுவாயின் தன்மை, நிலைமை போன்றவற்றைக் குறிக்கும் சொல்லை உருவாக்கப் பயன்படும் இடைச்சொல்
4. 'போல்' என்ற ஒப்புமைப் பொருளில் பயன்படுத்தும் இடைச்சொல்
5. நான்காம் வேற்றுமை உருபுடன் இணைந்து 'பொருட்டு', காரணமாக' என்ற பொருளைத் தரும் பின்னுருபு
6. பிறரின் தூண்டுதல் இல்லாமல் கர்த்தாவே தன்னிச்சையாகச் செயல்படுவது என்ற பொருளைத் தரப் பயன்படுத்தும் இடைச்சொல்.
7. ஒரு செயல் தொடர்ந்தும் மிகுதியாகவும் நிகழ்கிறது என்ற பொருளைக் காட்டும் இடைச்சொல்.
8. வாழ்த்து, வசை முதலியவற்றைத் தெரிவிக்கப் பயன்படுத்தும் இடைச்சொல்

-ஆக, இடைச்சொல்

1.ஒரு பெயர்ச்சொல்லை வினையடை ஆக்கும் இடைச்சொல். குழந்தை அழகாகச் சிரிக்கிறது /வேகமாக வா. 2.ஒரு தொடரை வினையடை ஆக்கப் பயன்படும் இடைச்சொல். மகன் வெளிநாடு செல்வதாகக் கனவு கண்டார்/அவர் எனக்குப் பணம் தருவதாகச் சொன்னார். 3.ஒரு வாக்கியத்தில் எழுவாயின் தன்மை, நிலைமை போன்ற வற்றைக் குறிக்கும் சொல்லை உருவாக்கப் பயன்படும் இடைச்சொல். அவன் சிறந்த வீரனாக விளங்குகிறான். 4.'போல்' என்ற ஒப்புமைப் பொருளில் பயன்படுத்தும் இடைச்சொல். இட்லி கல்லாக இருக்கிறது. / கவலைகள் இல்லாமல் மனம் பஞ்சாக இருந்தது./அவன் புலியாகப் பாய்ந்தான்./ என்னை நிழலாகத் தொடர்ந்தாள். 5.நான்காம் வேற்றுமை உருபுடன் இணைந்து 'பொருட்டு', காரணமாக' என்ற பொருளைத் தரும் பின்னுருபு. /உனக்காக இந்த உதவியைச் செய்கிறேன்./ அவன் செய்த சிறு தவறுக்காக இவ்வளவு பெரிய தண்டனையா?/ 6.பிறரின் தூண்டுதல் இல்லாமல் கர்த்தாவே தன்னிச்சையாகச் செயல்படுவது என்ற பொருளைத் தரப் பயன்படுத்தும் இடைச்சொல். நான் கேட்க வில்லை, அவராகக் கொடுத்தார்./தானியங்கி இயந்திரம் என்பதால் அது தானாகவே நின்றுவிடும். 7.ஒரு செயல் தொடர்ந்தும் மிகுதியாகவும் நிகழ்கிறது என்ற பொருளைக் காட்டும் இடைச்சொல் / அவள் சேலை சேலையாகப் புரட்டிப்பார்த்தாள். அவருக்குக் கோபம்கோபமாக வந்தது. /சரியான முகவரி தெரியாமல் தெருவில் வீடுவீடாக ஏறி இறங்கினான். / 8.வாழ்த்து, வசை முதலிய வற்றைத் தெரிவிக்கப் பயன்படுத்தும் இடைச்சொல். பரமண்டலத்திலுள்ள எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் ஜெபிக்கப் படுவதாக, உம்முடைய ராஜ்ஜியம் வருவதாக! /'நீ புழுவாய்ப் பிறப்பாயாக!' என்று சபித்தார்.

பொதுவாக ஆக என்ற சொல் ஆக, ஆகல், என்பது-என்னும் 3 இடைச்சொல் கருத்துப் பிரிவு இல்லாத அசைநிலையாக வரும்

(தொல்காப்பியம், இடையியல் 32) (இருவர் உரையாடலுக்கு இடையில் வந்தது) மொத்த மாய் (எ.கா.) ஆகத்தொகை =மொத்தத் தொகை

முழுதும் (எ.கா.) ஆகமோசம் அவ்வாறாக (எ.கா.) ஆக திருடனைப் பிடித்தனர். இரும்பை வேலாக வடித்தான் இவ்வாறு இடம் பெறுவது இயல்பான தமிழ் மொழி அமைப்பை ஒட்டி நடந்த சொல்லாக்கங்கள். மேலும் ஆகக் கூட்டுச் சொல்லாக **ஆக, ஆகக்கூடி, ஆகமொத்தத்தில், ஆக மோசம், ஆக மட்டம்** போன்ற சொற்கள் இடம் பெற்றுள்ளன.

**ஆகக்கூடி** ākakkuti adv. In the total, so that **மொத்தத்தில்** ஆகவே, ஆக்கூடி நீ செய்தது வீணாயிற்று.

**ஆக, இடைச்சொல்**

- 'மொத்தத்தில்' என்ற பொருளில் இரண்டு வாக்கியங்களை அல்லது ஒரு வாக்கியத்தின் இரண்டு பகுதிகளைத் தொடர்புபடுத்தும் இடைச்சொல்

சட்டை ஆறு, வேட்டி நான்கு, துண்டு மூன்று ஆகப் பதின்மூன்று உருப்படிகள்

ஆக, தொண்ணூறு சாட்சிகள்மூலம் குற்றம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது

- **காண்க:** ஆகமொத்தம் '(எல்லாவற்றையும் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்த்தபின்) முடிவில்' என்ற பொருளில் இரு வாக்கியங்களை அல்லது பகுதிகளைத் தொடர்புபடுத்தும் இடைச்சொல்; 'இறுதியாக' இவ்வளவு முயற்சிசெய்து என்ன பயன்? ஆகமொத்தம், தண்ணீர் கிடைக்கவில்லை ஆகமொத்தம், உங்கள் அறிவுரைகள் அனைத்தும் வீண்
- 'மிகவும்' என்ற பொருளில் பயன்படுத்தப் படும் இடைச்சொல்

படம் ஆக மோசம்

அந்த ஆள் ஆக மட்டம்

- **ஆக சொல் புதிது பொருற் புதிது**

ஆக என்ற சொல்லும் சிறந்த என்ற சொல்லும் சேர்ந்து ஒரு புதிய சொல்லை உருவாக்கியுள்ளது. இச்சொல் ஆங்கிலத் தொடரின் - Greatest Of All Time (G.O.A.T) - Mostly used in Sports Context. நேரடி பொருளாகும். ஆகச்சிறந்த என்ற சொல் தமிழ் அகராதியில் இடம்பெறவில்லை. இத்தொடர் 'Greatest Of All Time: used to refer to or describe the person who has performed better than anyone else ever, especially in a sport: Mohammad Ali boxed his way into our hearts and will forever be known as GOAT'. https:// dictionary.cambridge.org /dictionary /english / goat. இந்தச் சொல் தமிழ் மொழியில் புதிய சொற்பொருளை உருவாக்கியுள்ளது. ஆங்கிலத்தில் உள்ள Greatest Of All Time என்ற சொல்லுக்கு இணையாக ஆகச்சிறந்த (என்றென்றும் ஆகச்சிறந்த) என்ற பொருளில் ஏறக்குறைய 2000 ஆண்டு முதல் மக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**எடுத்துக்காட்டாக**

**விளையாட்டுத் துறை**

* ஆட்டக்காரர் முகமது அலி, குத்துச்சண்டை ஆட்டத்தின் ஆகச்சிறந்த ஆட்டக்காரராக என்றென்றும் கொண்டாடப்படுகிறார்.
* பிரான்ஸ் வீரர் பெஞ்ச மின் பவார்ட் போட்ட கோல் இவ்வாண்டு உலகக் கிண்ணப் போட்டியின் ஆகச்சிறந்த கோலாக தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளது.
* இதுவரை நடந்தபோட்டியில் இதுதான் இந்தியாவின் ஆகச்சிறந்த செயல்பாடு. நாம் வென்ற 14 பதக்கங்களில் தமிழ்நாட்டை சேர்ந்த 6 வீரர்களின் பங்கு இருந்ததுதான்.
* ஷேன் வார்ன் கிரிக்கெட் உலகில் ஆகச்சிறந்த லெக் ஸ்பின்னர்களில் ஒருவராகத் திகழ்ந்தார்.

**இலக்கியம்**

* இதுவரை ஜெயகாந்தனைப் பற்றி எழுதப் பட்ட கட்டுரைகளில் இதுவே தலையாயது.
* இந்த ஆண்டின் ஆகச்சிறந்த நகைச்சுவை இதுதான்.
* சிறந்த நாகரிக வாழ்க்கையை வாழ்ந்திட்ட தமிழர்களின் ஆகச்சிறந்த தொன்மைப் படைப்புதான் சங்க இலக்கியப் பாடல்கள்.
* நான்மறைகளின் ஆகச்சிறந்த பயனாக உபநிடதங்கள் வேதங்களின் இறுதியில் வைக்கப்பட்டிருக்கின்றன.
* தமிழ் இலக்கியத்தின் ஆகச்சிறந்த எழுத்தாளராகத் திகழ்ந்தவர் கி.ராஜநாராயணன்.

அறிவியல்

* சக்கரம் கண்டுபிடித்ததே உலகத்தின் புரட்சி. இதை கண்டுபிடித்தவர்களே புரட்சியாளர்கள். அவர்களே ஆகச்சிறந்த விஞ்ஞானிகள்.
* மனிதகுலத்தின் ஆகச்சிறந்த அறிவியல் மேதை ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்

திரைப்படம்

* தமிழ் திரையுலக வரலாற்றில் ஆகச் சிறந்த இரு இசையமைப்பாளர்கள் இளையராஜாவும், பாக்கியராஜும் தான் என்றால் இசைஞானிக்கு இனி கோபம் வராது.
* வயதானவராக நடிப்பார்! அப்பாவாகவும் நடிப்பார்! ஆகச்சிறந்த நடிகர் - விஜய் ...
* பாரதிராஜாவின் மண்வாசனை திரைப்படம் இந்த வகைமையில் ஆகச் சிறந்த எடுத்துக்காட்டு என்று சொல்லவேண்டும்.
* சமுத்திரக்கனிக்கு ‘இதுதான் ஆகச்சிறந்த ரோல்’னு அவரே சொன்னார்.
* கோவிந் நிஹலானி. இந்தியாவின் ஆகச் சிறந்த இயக்குநர்களில் முதன்மையான வர்.
* அசுரன் ஒரு ஆகச்சிறந்த உதாரணம். அந்த வரிசையில் வந்தவர்தான் மாரி செல்வராஜ்.
* பல தொழில்நுட்பங்களை பல ஆண்டு களுக்கு முன்னரே தமிழ் சினிமாவிற்கு அறிமுகபடுத்திய தீர்க்கதரிசி. அப்படிப் பட்ட ஆகச்சிறந்த கலைஞன் கமல்ஹாசன்.
* ஆகச்சிறந்த கலைஞன் தங்கர்பச்சானின் அழகி
* ரசிகர்களின் ரசனைக்கான, கொண்டாட் டத்துக்கான ஆகச்சிறந்த இடம் திரையரங்குகள் என்பதையும் நிறுவின.
* ரஜினியின் ஆகச்சிறந்த நடிப்பை வெளிப் படுத்திய படம் அவள் அப்படித்தான்.
* இன்று வரை தமிழ் சினிமாவின் ஆகச்சிறந்த பட்டியலில் முக்கிய இடம்பிடித்திருக்கிறது. ‘மகளிர் மட்டும்’, மீ டு வை அன்றைக்கே பேசியது.
* படத்தில் ஆங்காங்கே ஆல் இன் ஆல் அழகுராஜா வருகிறார். படத்தின்
* கதைக்கும் ஒட்டுமொத்த ரசிகர்களுக்கும் ஆகச்சிறந்த ரிலாக்ஸாக அமைந்தன.

உறவு

* இடதுசாரி இயக்கத்தில் இருந்த என் அப்பாவும் அவரும் நான் பிறக்கும் முன்பே... ஆகச்சிறந்த சினேகிதர்கள்.
* அவர்கள் இருவரும் ஆகச்சிறந்த நண்பர்கள்
* அவர்கள் ஆகச்சிறந்த தோழிகள்

பொது

* ஆகச்சிறந்த "அறியாமை" யாதெனில், நமக்கு பிடிச்ச மாதிரி நாமே இல்லாதபோது,
* "நமக்கு பிடிச்ச மாதிரி அடுத்தவங்க இருக்கணும்" என எதிர்பார்ப்பதே..!!!
* சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகம் ஆசியாவின் ஆகச்சிறந்த பல்கலைக் கழகமாக..
* உலகின் ஆகச்சிறந்த மருத்துவக் கல்லூரி களின் பட்டியலை வணிக இதழான சிஇஓவேர்ல்டு வெளியிட்டுள்ளது.
* எங்கு இயற்கையின் அழகும் ஆகச்சிறந்த மனித முயற்சிகளும் இசைந்துபோகிறதோ அப்படிப்பட்ட வழிபாட்டுத்தலம்-ஆஸ்ரமம் தான் நமக்கு தேவை எனத் தெரிவித்தார் தாகூர்.
* ஆகச்சிறந்த பாரதத்தை உருவாக்க வேண்டும்... குடியரசுதின வாழ்த்து செய்தியில் சத்குரு வேண்டுகோள்..!
* என்றாவது ஒருநாள் ஆகச்சிறந்த எழுத்தாளானாகிவிடுவேன் என்கிற நம்பிக்கையில் சொந்தமாக கடை வைத்து அமர்ந்தேன்.
* கே. பாலசந்தர் நாடகத்தில் இருந்து சினிமாவுக்கு வந்தார். சினிமாவில் பரபரவென இருக்கும் போதே ‘மின்பிம்பங் கள்’ உருவாக்கி, தொலைக்காட்சி சீரியல் களுக்குள் இறங்கினார். ஒரு சீரியல் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு இவரின் சீரியல்கள் பலவும் ஆகச்சிறந்த உதாரணங்களாகத் திகழ்கின்றன என்பார்கள்.
* தமிழ்நாடு அரசு மருத்துவர்களின் அர்ப்பணிப்பு உணர்வுக்கு ஆகச்சிறந்த எடுத்துக்காட்டு கரோனா வைரஸ் நோயை முறியடிப்பதற்காக தங்களின் உயிரையும் பொருட்படுத்தாமல் அவர்கள் ஆற்றிவரும் சேவைதான்.

* உலகத்திலேயே ஆகச்சிறந்த கொடையாளன் விவசாயிதான்.
* சில பிரச்சனைகளில் இருந்து தற்காலிக மாக தப்பிக்க ஆகச்சிறந்த வழி மௌனம்.
* தமிழகத்தின் ஆகச்சிறந்த தலைவர் காமராஜர்
* "கல்வியே ஆகச்சிறந்த ஆயுதம்"!

**அரசியல்**

* 'நவீன இந்தியாவின் ஆகச்சிறந்த சிற்பி நேரு!' - ராகுல் புகழாரம்
* ஆகச்சிறந்த பேச்சாளர் பேரறிஞர் அண்ணா அவர்கள்தான்
* பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சீமான், நாங்கள் ஆகச்சிறந்த தொடக்கத் தைச் செய்து கொண்டிருக்கிறோம்.
* ஆகச்சிறந்த பேச்சாளர் பேரறிஞர் அண்ணா அவர்கள்தான்

**உடல் நலம்**

* உங்கள் ஆரோக்கியமே உங்கள் ஆகச்சிறந்த முதலீடு
* நம் உடலுக்குப் பழைய சோறு ஆகச்சிறந்த உணவு
* நம் உடம்புக்கு நெல்லிக்கனி ஆகச்சிறந்த கனி

**சிறந்த (மிகச்சிறந்த என்ற பொருளில்)**

சிவாஜியின் ஆகச்சிறந்த படங்கள் ஏராளம். அதேபோல் தோல்விப்படங்களும் தாராளம். ஆனால் எந்தப் படங்களாக இருந்தாலும் அங்கே சிவாஜி பிராண்ட் லேபிள்களை ஒட்டாமல் இருக்கமாட்டார்.

பாலுமகேந்திராவின் 'அழியாதகோலங்கள்' படத்தில் டீச்சர் வேடம். நடிப்பில் ஆகச் சிறந்த பரிணாமம் காட்டி பிரமாதப் படுத்தினார்.

'தேவதாஸ்' என்ற அந்தப் படம் செய்த தாக்கம், இன்றைக்கும் தொடர்கிறது. காதலில் தோல்வியுற்றால், இளைஞன் தாடி வைத்து திரிவான் என்று காதலுக்கும் காதல் தோல்விக்கும் தாடியை அடையாளமாகக் காட்டிய 'தேவதாஸ்', திரையுலகின் ஆகச் சிறந்த காதல் காவியம்.

நம் காலத்தின் ஆகச்சிறந்த இயக்குநர் வெற்றிமாறனுக்கு இனிய பிறந்த நாள் வாழ்த்துகள்.

எம்ஜிஆரின் ஆகச்சிறந்த படங்களில் முக்கியமான திரைப்படம் 'ஆயிரத்தில் ஒருவன்.'

**முடிவுரை**

ஆகச்சிறந்த என்ற சொல் ஆரம்பக் காலத்தில் பெருப்பாலும் இரண்டாயிரம் முதல் இரண்டாயிரத்து பத்து வரை மிகச் சிறந்தவற்றுள் எல்லாம் மிகச்சிறந்த என்ற பொருண்மையில் வழங்கியது. அப்பொழுது இச்சொல் ஆங்கிலத் தொடரின் - Greatest Of All Time (G.O.A.T). என்ற நேரடி பொருளைத் தந்தது. தற்பொழுது இச்சொல் இரண்டாயிரத்து பத்து முதல் தற்பெழுது வரை மிகச்சிறந்த என்பதற்கு இணையான ஒருபொருட் பன்மொழியாக விளங்குகிறது. தமிழில் சிறந்த, மிகச்சிறந்த என்ற இரு பொருள் வேறுபாடு மட்டுமே காணப்படுகின்றன. எனவே மிக (Intensifier) என்ற சொல்லுக்கு இணையாக வழங்கப்படுகிறது.

**துணை நூல்கள்**


♦ அகத்தியலிங்கம்,ச., பாலசுப்பிரமணி யன், க., 1974. 'தமிழிலக்கண மரபு' ச. அகத்தியலிங்கம், க. பாலசுப்பிர மணியன்,க. (பதி.), **இலக்கண ஆய்வுக் கட்டுரைகள்** I (ப.X-Liii) அண்ணாமலைநகர்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

♦ அகத்தியலிங்கம்,ச.1979. **மொழியியல்-1சொல்லியல்-பெயரியல்.** அண்ணா மலைநகர்: இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம்.

♦ ராமகிருஷ்ணன் எஸ்., 2020 தொகுப்பாசிரியர் க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி. சென்னை; க்ரியா வெளியீடு

♦ சுத்தானந்த பாரதியார், 1964. நல்ல தமிழ் எழுதுவது எப்படி. சென்னை: வள்ளுவர் பன்னை.

♦ பரமசிவம், கு. 1983. **இக்காலத் தமிழ் மரபு,** சிவகங்கை: அன்னம் (பி) லிட்.

♦ வரதராஜன், மு. 1974. **மொழிநூல்,** சென்னை: கழக வெளியீடு.

♦ வையாபுரிப் பிள்ளை, எஸ் 1926 தமிழ் அகராதி சென்னை; சென்னைப் பல்கலைக்கழகம்